சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :27.03.2025
ம.சா.1 – செல்வி W/o.கார்த்திக்
MCOP No.8/2024 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

விபத்தில் காலமானவர் என்னுடைய கணவர் ஆவார். 29.01.2022 அன்று காலை 7.00 மணியளவில் முத்துராமலிங்கபட்டியில் நடந்தது. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. நான் தான் காவல்நிலையத்தில் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய விபரம் கூறினேன். முதல் தகவல் அறிக்கையானது கடந்த 31.01.2022 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் 31.01.2022 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் மதுரை அரசு மருத்துவமனையில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கடந்த 29.01.2022 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் பின்இருக்கையில் அமர்ந்து சென்ற என்னுடைய கணவர் கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 29.01.2022 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் விபத்து நடந்தது ஆனால் என்கணவரை 30.01.2022 அன்று மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த அன்றே மருத்துவமனையில் சேர்த்துவிட்டோம். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மறுநாள் தான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை முடிந்த பிறகு மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்தார்கள் என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது என்னுடன் நான், என் அம்மா, என் மகள் மற்றும் மூர்த்தி

என்பவரும் உடன் வந்திருந்தார் என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெறும் போது பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் என் கணவராக நிலைதடுமாறி கீழே விழுந்து தலைக்காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அருண்பாண்டியன் என்பவர் வண்டியின் பின்னால் ஏறி உட்கார்ந்து செல்லும் போது கீழே விழுந்ததாக குறிப்பிட்டுள்ளோம். விபத்து பதிவேட்டு நகலில் என் கணவர் மதுபோதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தின் போது என் கணவர் மது அருந்தியதால் அவர் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்றும், இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு காரணமாக விபத்து நேரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 2008ம் ஆண்டு திருமணம் நடந்தது. விபத்து சமயத்தில் எனது கணவர் கான்ட்ராக்ட் சமையல் வேலை செய்து வந்தார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது கணவர் சிங்கப்பூரில் சமையல் வேலை செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.என்னை திருமணம் முடித்த பிறகு என் கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்லவே இல்லை என்றால் சரியல்ல. சென்றுள்ளார். என் கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவந்தார் என்பதை நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2000மாவது ஆண்டு என் கணவர் பாஸ்போர்ட் எடுத்தார் என்றும், அது 2010உடன் காலவதியாகிவிட்டது என்றும், அதன்பிறகு அது புதுப்பிக்கப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. என் கணவர் பாஸ்போர்ட்டை என்னிடம் தான் வைத்துள்ளேன். அவர் இறந்துவிட்டதால் அது எங்குள்ளது என்று தெரியவில்லை. நான் இந்த மனுவில் இழப்பீட்டு தொகையாக 40 லட்சம் ரூபாய் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 30 லட்சம் ரூபாய் தான் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். விபத்திற்கு என்

கணவருடைய கவனக்குறைவு தான் காரணம் என்றும்,அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீட்டு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.03.27 17:26:13 +0530

Sub Judge
Melur